# Chapter – 23

# லிப்ரே ஆபீஸ் கால்க்

---

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**Question 1.**
எல்லா சார்புகளும் ......................... என்ற குறியீட்டைக் கொண்டு துவங்கும்.
அ) =
ஆ) –
இ) >
ஈ) }

**விடை:**
அ) =

**Question 2.**
................... என்ற சார்பு கொடுக்கப்பட்ட மதிப்புகளின் கூட்டுத்தொகையைக் கணக்கிட உதவுகிறது.
அ) Average
ஆ) Sum
இ) Min
ஈ) Max

**விடை:**
அ) Average

**Question 3.**
......................... என்ற குறியீடு எழுத்துக்களைப் பயன்படுத்தும் சூத்திரத்தில் இடம்பெறுகிறது.
அ) ampersand(&)
ஆ) comma
இ) exclamation Nalallation
ஈ) hyperlink

**விடை:**
அ) ampersand(&)

**Question 4.**
பின்வருவனவற்றில் எது தொடர்புபடுத்தும் செயலி?
அ) +
ஆ) >
இ) –
ஈ) NOT

**விடை:**
ஆ) >

**Question 5.**
…………………… என்ற சார்பு கொடுக்கப்பட்ட மதிப்புகளில் மிகச்சிறிய மதிப்பை நமக்குத் தரும்.
01) Average
ஆ) Sum
இ) Min
ஈ) Max

**விடை:**
இ) Min

### II. பின்வரும் வினாக்களுக்கு விடையளி

**Question 1.**
Count என்ற சார்பை எடுத்துக்காட்டுடன் விளக்கு.

**விடை:**

- COUNT()
- தேர்வு செய்யப்பட்ட இடத்தில் மொத்தம் எத்தனை எண் மதிப்புகள் உள்ளன என்பதைத் தருகிறது.
- எடுத்துக்காட்டு: = COUNT (A2 : A6)
  முடிவு: 5

**Question 2.**
விளக்கப்படங்கள் ஏன் தேவைப்படுகின்றன?

**விடை:**

- விளக்கப்படங்கள் என்பவை கொடுக்கப்பட்ட தரவுகளை எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்படும் படங்கள் ஆகும்.
- விளக்கப்படங்கள் வரைய பின்வருவனவற்றை செய்ய வேண்டும்.
    1. விளக்கப்படங்கள் வரையத் தேவையான தரவுகளைத் தேர்வு செய்க
    2. Insert → Chart கிளிக் செய்க அல்லது "Insert Chart" என்ற குறும்படத்தை கிளிக் செய்க.

**Question 3.**
தரவுகளை வரிசைப்படுத்துதல் என்றால் என்ன?

**விடை:**
கொடுக்கப்பட்ட தரவுகளை ஏறுவரிசை அல்லது இறங்கு வரிசையில் வரிசைப்படுத்துவதே தரவுகளை வரிசைப்படுத்துதல் எனப்படும்.

1. தேவையான தரவுகளை தேர்வு செய்க
2. Data → Sort கிளிக் செய்க

**Question 4.**
Max (), Min () சார்புகளின் பயன்கள் யாவை?

**விடை:**
Max () → கொடுக்கப்பட்ட மதிப்புகளில் மிகப்பெரிய எண்ணைக் காண உதவுகிறது.
Min ( ) → கொடுக்கப்பட்ட மதிப்புகளில் மிகச்சிறிய எண்ணைக் காண உதவுகிறது.

**Question 5.**
அறை முகவரி என்றால் என்ன?

**விடை:**

- ஒவ்வொரு அறையும் அதன் முகவரியால் குறிப்பிடப்படும்.

- அறை முகவரி என்பது நிரல் எழுத்து மற்றும் நிரை எண்ணின் சேர்ப்பு ஆகும்.
- முதல் அறையின் முகவரி A1 ஆகும்.
- பெயர்ப் பெட்டியானது (Name Box) தற்போது செயல்பாட்டில் உள்ள அறையின் முகவரியைக் காட்டும்.

## I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. …………………… என்பவை எளிய மற்றும் சிக்கலான கணக்குகளைத் தீர்க்க பெரிதும் உதவுகின்றன.
அ) அறை
ஆ) சார்புகள்
இ) தொகுப்பு
ஈ) வரிசை

**விடை:**
ஆ) சார்புகள்

**Question 2.**
தேர்வு செய்யப்பட்ட இடத்தில் மொத்தம் எத்தனை எண் மதிப்புகள் உள்ளன என்பதைத் ……………………. தருகிறது.
அ) SUM()
ஆ) MAX()
இ) COUNT()
ஈ) AVERAGE()

**விடை:**
இ) COUNT()

**Question 3.**
இரண்டு மதிப்புகளை ஒப்பிடுவதற்கு ……………………..
பயன்படுகின்றன.
அ) ஒப்பீட்டு செயற்குறிகள்
ஆ) எண்கணிதச் செயற்குறிகள்
இ) தர்க்கச் செயற்குறிகள்
ஈ) மேலே உள்ள அனைத்தும்

**விடை:**
அ) ஒப்பீட்டு செயற்குறிகள்

**Question 4.**
கீழே கொடுக்கப்பட்டதில் எது தர்க்கச் செயற்குறி?
அ) –
ஆ) *
இ) >
ஈ) AND

**விடை:**
ஈ) AND

**Question 5.**
வரிசைகளும், நெடுவரிசைகளும் வெட்டிக் கொள்ளும் பெட்டியே ………………….. எனப்படும்.
அ) நெடுவரிசை
ஆ) வரிசை
இ) அறை
ஈ) தரவு

**விடை:**
இ) அறை

## II. பின்வரும் வினாக்களுக்கு விடையளி

**Question 1.**
லிப்ரே ஆபீஸ் கால்க் என்றால் என்ன?

**விடை:**

- லிப்ரே ஆபீஸ் கால்க் என்பது முக்கியமாக கணக்கீடுகளுக்காக உருவாக்கப்பட்டதாகும்.
- இது ஒரு தொகுப்பு ஆகும். இதனை பின்வருமாறு திறக்கலாம்.
    1. Start Buttonஐ அழுத்தலாம்.
    2. Libre Office Calcஐ அழுத்தவும்.

**Question 2.**
SUM() விளக்குக.

**விடை:**

- கொடுக்கப்பட்ட மதிப்புகளின் கூட்டுத்தொகையைக் காண பயன்படுகிறது.
- = SUM(A2:A6)

**Question 3.**
சார்புகள் என்றால் என்ன?

**விடை:**

- சார்புகள் என்பவை எளிய மற்றும் சிக்கலான கணக்குகளைத் தீர்க்க பெரிதும் உதவுகின்றன.
- லிப்ரே ஆபீஸ் கால்க்கின் சூத்திரங்களை "=" என்ற குறியீட்டுடன் தொடங்க வேண்டும்.

**Question 4.**
வரிசை மற்றும் நெடுவரிசை வேறுபடுத்துக.

**விடை:**

| வரிசை | நெடுவரிசை |
|---|---|
| 1. வரிசை என்பது கிடைமட்டமாக அமைந்துள்ள பெட்டிகள் ஆகும். | நெடுவரிசை என்பது செங்குத்தாக அமைந்துள்ள பெட்டிகள் ஆகும். |
| 2. இவை 1, 2, 3, ....... என்ற எண்களால் பெயரிடப்பட்டு இருக்கும். | இவை A முதல் Z வரை பெயரிடப்பட்டுள்ளன. மேலும் AA, BB, ..... AMJ வரை இருக்கும் |

**Question 5.**
ஒப்பிட்டு செயற்குறிகள் – வரையறு.

**விடை:**

- இரண்டு மதிப்புகளை ஒப்பிடுவதற்கு ஒப்பிட்டு செயற்குறிகள் பயன்படுகின்றன.
- இவற்றின் முடிவுகள் True அல்லது False என்பவற்றில் ஒரு முடிவாக மட்டுமே இருக்கும்.